# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : காளியப்பன் | Caste | : |
| S/o. | : செங்கோடன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 05.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் அரசிராமணி கிராமம் செட்டிப்பட்டி வன்னியர் தெருவில் குடியிருக்கிறேன். நான் டெக்ஸ்டைல் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆனந்தன் எனக்கு மாமனார். அவர் செட்டிப்பட்டியில் உள்ள ஸ்ரீதுர்கை சுடலை காளியம்மன் கோவில் பூசாரியாக இருந்தார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவரும் எனக்கு மாமா முறை ஆவார்.

05.03.2022ம் தேதி இரவு 9.30 மணிக்கு என் மாமனார் ஆனந்தன்

வீட்டில் சாப்பிட்டுவிட்டு கோயிலுக்கு படுக்க சென்றார். எப்போதும் என் மாமனார் கோவிலில்தான் படுக்க செல்வார். இரவு 10.30 மணிக்கு என் மாமனாரை கோவில் வாசலில் வைத்து காத்தவராயன் என்ற போர்மன்னன் வெட்டிவிட்டதாக என் மனைவி தகவல் சொன்னார். ஆஜர் எதிரிதான் காத்தவராயன் என்ற போர்மன்னன். ஆஜர் எதிரியும் என் மச்சினன் சித்தநாதன், காளியப்பன் மற்றும் ராமலிங்கம் ஆகியோர் சேர்ந்து விறகு உடைக்கும் மிசின் போட்டு தொழில் செய்து வந்தார்கள். அதில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு பிரிந்து சென்றுவிட்டார்கள். அதன்பிறகு எதிரியின் மனைவி இறந்ததற்கு என் மாமனார்தான் காரணம், அவர் தனது மனைவிக்கு பில்லி, சூனியம் வைத்துவிட்டார் அதனால் தனது மனைவி இறந்துவிட்டார் என்று எதிரி சொல்லி வந்தார்.

நான் காலை சேலம் அரசு மருத்துவமனையில் எனது மாமனார் ஆனந்தனை பார்த்தேன். அவர் கழுத்து மற்றும் கையில் வெட்டுப்பட்டு கிடந்தார். போலிசார் என்னை அங்கு வைத்து விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எந்த ஊரில் டெக்ஸ்டைல் வைத்திருக்கிறேன் என்றால் ஈரோட்டில் கூலிக்கு வேலை செய்கிறேன். போலிசார் என்னை விசாரித்தபோதும் டெக்ஸ்டைல்சில் கூலிக்கு ஈரோட்டில் வேலை செய்கிறேன் என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். போலிசார் என்னை விசாரித்தபோது என் மனைவி எனக்கு தகவல் சொல்லி நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி.

சேலம் அரசு மருத்துவமனையில் என் மாமியார், என் மனைவி ஆகியோர் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. என் வீட்டிற்கும் என் மாமனார் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 100 மீட்டர் தூரம் இருக்கும். என் வீடு மெத்தை வீடு, என் மாமனார் வீடு அடுக்குமாடி வீடு என்றால் சரி. போலிசார் என்னை விசாரித்தபோது காளியப்பன், சித்தநாதன், ராமலிங்கம் மற்றும் எதிரி கூட்டாக தொழில் செய்தார்கள் என்றும் அதில் அவர்களுக்குள் பிரச்சனை வந்து பிரிந்து சென்றுவிட்டார்கள் என்றால் சரி. அதிலிருந்து எதிரிக்கும் சித்தநாதனுக்கும் பேச்சுவார்த்தையில்லை என்றால் சரி.

எதிரிக்கும் பூசாரி ஆனந்தனுக்கும் தொழில் சமமந்தமாகவோ, எதிரியின் மனைவி இறந்தது சம்மந்தமாகவோ எந்த ஒரு முன்விரோதமும் இல்லை என்றும், அவரது மகனான சித்தநாதனுக்கும் ஆஜர் எதிரிக்கும்தான் முன்விரோதம் காரணமாக பேச்சு வார்த்தையில்லை என்றால் பூசாரி ஆனந்தனுக்கும் எதிரிக்கும் தொழில் சம்மந்தமாகவும் எதிரியின் மனைவி இறப்பு சம்மந்தமாகவும் முன்விரோதம் உண்டு. சித்தநாதனுக்கும் எதிரிக்கும் தொழில் சம்மந்தமாக பேச்சுவார்த்தை கிடையாது.

என் மச்சினன் சித்தநாதன் பங்கு பிரிக்கும்போது ஒரு டிராக்டரையும் கட்டை உடைக்கும் மிசினையும் எடுத்து சென்றார் என்றால் சரி. அவ்வாறு எடுத்துக்கொண்டு சித்தநாதன் பணம் கொடுக்கவில்லை என்பதால் அவர்கள் இருவருக்கும் முன்விரோதம் என்றால் இல்லை. என் மாமியார் என் மாமனார் இறக்கும்வரை கோவிலில் பூஜை சாமான் கடை வைத்திருந்தார் என்றால் சரி. என்

மாமியார் பூஜை கடையை மூடும்வரை என் மாமனார் அங்கேயே உடனிருப்பார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. கோயில் வரவு செலவு கணக்குகளை யார் பார்ப்பார்கள் என்றால் எனக்குத் தெரியாது. பூசாரி ஆனந்தனுக்கும் எதிரிக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சித்தநாதன் எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக பணம் தராமல் பணத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் எதிரி மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.